ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ரு’தி$_3$ ॥

# நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ முடியானே ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ முடியானே ॥

ஆழ்வார் கரணங்களும் தாமும் பெருவிடாய்ப் பட்டுப் பேசுதல்

‡முடியானே! மூவுலகும் தொழுதேத்தும்⋆ சீர்
அடியானே⋆ ஆழ் கடலைக் கடைந்தாய்!⋆ புள்ளூர்
கொடியானே⋆ கொண்டல் வண்ணா!⋆ அண்டத்தும்பரில்
நெடியானே!⋆ என்று கிடக்கும்⋆ என் நெஞ்சமே (1)

நெஞ்சமே! நீள் நகராக⋆ இருந்த என்
தஞ்சனே⋆ தண் இலங்கைக்கு⋆ இறையைச் செற்ற
நஞ்சனே⋆ ஞாலம் கொள்வான்⋆ குறள் ஆகிய
வஞ்சனே⋆ என்னும் எப்போதும்⋆ என் வாசகமே (2)

வாசகமே ஏத்த அருள் செய்யும்⋆ வானவர் தம்
நாயகனே⋆ நாள் இளந் திங்களைக்⋆ கோள் விடுத்து⋆
வேய் அகம் பால் வெண்ணெய் தொடுவுண்ட⋆ ஆன் ஆயர்
தாயவனே⋆ என்று தடவும்⋆ என் கைகளே (3)

கைகளால் ஆரத்⋆ தொழுது தொழுதுன்னை⋆
வைகலும் மாத்திரைப் போதும்⋆ ஓர் வீடின்றி⋆
பை கொள் பாம்பேறி⋆ உறை பரனே⋆ உன்னை
மெய்கொள்ளக் காண⋆ விரும்பும் என் கண்களே (4)

கண்களால் காண⋆ வருங்கொல் என்றாசையால்⋆
மண் கொண்ட வாமனன்⋆ ஏற மகிழ்ந்து செல்⋆
பண் கொண்ட புள்ளின்⋆ சிறகொலி பாவித்து⋆
திண் கொள்ள ஓர்க்கும்⋆ கிடந்தென் செவிகளே (5)

செவிகளால் ஆர⋆ நின் கீர்த்திக் கனி என்னும்
கவிகளே⋆ காலப் பண் தேன்⋆ உறைப்பத் துற்று⋆
புவியின் மேல்⋆ பொன் நெடுஞ்சக்கரத்துன்னையே⋆
அவிவின்றி ஆதரிக்கும்⋆ எனதாவியே (6)

www.prapatti.com

ஆவியே! ஆரமுதே!⋆ என்னை ஆளுடை⋆
    தூவியம் புள்ளுடையாய்!⋆ சுடர் நேமியாய்⋆
பாவியேன் நெஞ்சம்⋆ புலம்பப் பல காலும்⋆
    கூவியும் காணப்பெறேன்⋆ உன கோலமே (7)

கோலமே! தாமரைக் கண்ணதோர்⋆ அஞ்சன
    நீலமே⋆ நின்றெனதாவியை⋆ ஈர்கின்ற
சீலமே⋆ சென்று செல்லாதன⋆ முன்னிலாம்
    காலமே⋆ உன்னை எந்நாள்⋆ கண்டு கொள்வனே (8)

கொள்வன் நான் மாவலி⋆ மூவடி தா என்ற
    கள்வனே⋆ கஞ்சனை வஞ்சித்து⋆ வாணனை
உள் வன்மை தீர⋆ ஓர் ஆயிரம் தோள் துணித்த
    புள் வல்லாய்⋆ உன்னை எஞ்ஞான்று⋆ பொருந்துவனே (9)

பொருந்திய மா மருதின் இடை போய⋆ எம்
    பெருந்தகாய்⋆ உன் கழல்⋆ காணிய பேதுற்று⋆
வருந்தி நான்⋆ வாசக மாலை கொண்டு⋆ உன்னையே
    இருந்திருந்து⋆ எத்தனை காலம் புலம்புவனே (10)

‡புலம்பு சீர்ப்⋆ பூமி அளந்த பெருமானை⋆
    நலம் கொள் சீர்⋆ நன் குருகூர்ச் சடகோபன்⋆ சொல்
வலம் கொண்ட ஆயிரத்துள்⋆ இவையும் ஓர் பத்து
    இலங்கு வான்⋆ யாவரும் ஏறுவர்⋆ சொன்னாலே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com